# அலகு - 23
# காட்சித்தொடர்பு




## I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. அசைவூட்டும் காணொளிகளை உருவாக்க பயன்படும் மென்பொருள் எது? **[PTA – 3]**
   அ) Paint ஆ) PDF இ) MS Word **ஈ) Scratch**

2. பல கோப்புகள் சேமிக்கப்படும் இடம் **[MDL – 19]**
   **அ) கோப்புத் தொகுப்பு** ஆ) பெட்டி இ) paint ஈ) ஸ்கேனர்

3. நிரல் (Script) உருவாக்கப் பயன்படுவது எது? **[PTA – 1]**
   **அ) Script area** ஆ) Block palette இ) Stage ஈ) Sprite

4. நிரலாக்கத்தைத் தொகுக்கப் பயன்படுவது எது? (அல்லது) கீழ்க்கண்டவற்றுள் எது நிரலாக்கத்தைத் திருத்தப் பயன்படுகிறது? **[PTA – 2]**
   அ) Inkscape **ஆ) Script editor** இ) Stage ஈ) Sprite

5. பிளாக்குகளை (Block) உருவாக்க பயன்படுவது எது?
   அ) Block palette **ஆ) Block menu** இ) Script area ஈ) Sprite

## II. பொருத்துக.

| பிரிவு - I | பிரிவு - II | விடைகள் |
|---|---|---|
| 1) நிரலாக்கப் பகுதி Script Area | குறிப்புகளைத் தட்டச்சு செய்தல் Type notes | **1) நிரல் உருவாக்கம் Build Scripts** |
| 2) கோப்புத் தொகுப்பு Folder | அசைவூட்ட மென்பொருள் Animation software | **2) கோப்பு சேமிப்பு Store files** |
| 3) ஸ்கிராச்சு Scratch | நிரல் திருத்தி Edit programs | **3) அசைவூட்ட மென்பொருள் Animation software** |
| 4) ஆடை திருத்தி Costume editor | கோப்பு சேமிப்பு Store files | **4) நிரல் திருத்தி Edit programs** |
| 5) நோட்பேடு Notepad | நிரல் உருவாக்கம் Build Scripts | **5) குறிப்புகளைத் தட்டச்சு செய்தல் Type notes** |

## III. சுருக்கமாக விடையளி

**1. ஸ்கிராச்சு (Scratch) என்றால் என்ன?**

* அசைவூட்டல்களையும், கேலிச்சித்திரங்களையும், விளையாட்டுகளையும் எளிதில் உருவாக்கப் பயன்படும் ஒருமென்பொருளே ஸ்கிராச்சு ஆகும்.
* இது ஒரு காட்சி நிரல் மொழி ஆகும்.
* எம்ஐடி (MIT) என்னும் பல்கலைத் தொழில்நுட்ப ஆய்வகம் இந்நிரலை எளிதாகவும், வேடிக்கையாகவும் கற்கும் வண்ணம் அமைத்துள்ளது.

**2. திருத்தி (EDITOR) குறித்தும் அதன் பகுதிகள் குறித்தும் எழுதுக?**

***ஸ்கிரிப்ட்/காஸ்டியூம் எடிட்டர் :*** நிரல்களையும் இஸ்பிரைட் படங்களையும் நாம் மாற்ற முடியும்.

***i) Script Area :*** இங்கு நிரல் கட்டமைக்கப்படுகிறது.

***ii) Block Menu :*** இங்கு பிளாக்கு வகையைத் தேர்வு செய்ய முடியும்.

***iii) Block Palette :*** இங்கு பிளாக்குகளை தேர்வு செய்யலாம்.

**3. மேடை (STAGE) என்றால் என்ன? [SEP - 2020]**

- ஸ்கிராச்சு சாளரத்தை திறக்கும் போது கிடைக்கும் பின்னணியை மேடை என்பர்.
- இதன் பின்னணி நிறம் வெள்ளையாக இருக்கும். தேவைப்படின் பின்னணி நிறத்தை மாற்றலாம்.

**4. ஸ்பிரைட்டு (SPRITE) என்றால் என்ன?**

- ஸ்கிராச்சு சாளரத்தில் பின்னணியில் உள்ள கணினி மாந்தர்களைக் ஸ்பிரைட்கள் என்பர்.
- ஸ்பிரைட்டை தேவைக்கேற்ப மாற்றும் வசதி இந்த மென்பொருளில் உள்ளது.

*******